# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization
Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 43. நடமாடும் உணவு விற்பனையாளர்கள்; வெதுப்பகங்கள் உட்பட சாப்பிட தயார் நிலையில் உள்ள உணவு பொருட்கள்

**விளக்கம்** – இந்த வழிகாட்டுதல்கள் முன்னதாகவே தயாரிக்கப்பட்டுச் சாப்பிடத் தயாராக வழங்கப்படும் உணவுப் பொருட்களை விற்பனை செய்வோருக்கானது.

**பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்**
**உரிமையாளர் / விற்பனையாளர்**

**உணவு தயாரிக்கும் போது**

- குறிப்பாகத் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் கடை பராமரிப்பு உதவியாளர்கள் முகக்கவசங்கள், கையுறைகள் மற்றும் பிற தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்துவதை இறுக்கமாக நடைமுறைப்படுத்தவும்.
- உணவு கையாள்பவர்கள் அனைவரும் உணவுகளைத் தயாரிப்பதற்கு முன்பு அவர்களது கைகளைக் கழுவ வேண்டும்.
- சமைப்பதற்கு முன்னர் சகல மரக்கறிகளையும் மற்றும் பழங்களையும் நன்கு கழுவுக.
- ஒவ்வொரு தடவையும் சமையலுக்குத் தயாராவதற்கு முன்னதாக உணவு தயாரிக்கும் மேசைகள், வெட்டும் பலகைகள், கத்திகள், இடுக்கிகள் போன்ற உணவுடன் நேரடியாகத் தொடர்புபடும் மேற்பரப்புகள் அனைத்தையும் தொற்றுநீக்கம் செய்யவும்.
- சகல உணவுகளையும் சேமிக்கும்போதும், தற்காலிகமாகச் சேமிக்கும்போதும், கொண்டு செல்லும்போதும் மூடி, நன்கு அடைத்து விடுங்கள்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது உரிமையாளரின் பொறுப்பு ஆகும்.

**உணவு விற்பனையின் போது**

- எப்போதும் ஒரு குறித்தொதுக்கப்பட்ட பிரதேசத்தில் அல்லது பாதையில் உங்களது வியாபாரத்தினை மேற்கொள்ளுங்கள். நீங்கள் இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபடும் பிரதேசத்தில் இனங்காணப்படும் கோவிட்-19 நோயாளிகள் அல்லது கோவிட் நோயாளிகளுடன் நேரடித் தொடர்பினைப் பேணிய நபர்கள் குறித்த விபரங்கள் குறித்து உடனுக்குடன் அறிந்து கொள்ளுங்கள்.
- தனிமைப்படுத்தப்பட்ட/ தடைசெய்யப்பட்ட பிரதேசங்களினுள் ஒருபோதும் ஊடுருவ வேண்டாம்.
- நீங்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்களில் வியாபாரத்தில் ஈடுபட வேண்டாம், அத்துடன் உங்களுக்காக உங்கள் வீட்டிலிருந்து வேறு எவரையாவது வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்காதீர்கள்.
- உடல் இடைவெளியைப் பேணுவதற்காக ஒரு தடவையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களே பொருட்களை வாங்கலாம் என மட்டுப்படுத்துங்கள். உங்களது நடமாடும் வாகனத்தில் ஒரு தடவையில் பொருட்களை வாங்குவதற்கு எத்தனை வாடிக்கையாளர்கள் காத்திருக்கலாம் என்பதனைக் காட்சிப்படுத்துங்கள்.
- பணத்தினைப் பெற்று மிகுதிப் பணத்தினைக் கொடுக்கும் செயற்பாட்டினைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கவும். உதாரணமாக பத்து ரூபா, இருபது ரூபா, அய்ம்பது ரூபா.
- சாப்பிடத் தயாராக இருக்கும் பொருட்களைக் கையாளும் வேளைகளில் எல்லாம் முகக்கவசம், இடுக்கி மற்றும் கையுறை ஆகியவற்றினை உபயோகிக்கவும் (வெற்றுக்கைகளால் உணவு வகைகளைத் தொடக்கூடாது).

- உங்களது நடமாடும் வாகனத்தில்/ விற்பனைக் கூடத்தில் தொற்றுநீக்கியை வைத்திருப்பதுடன் நீங்கள் கையுறைகளைக் கழற்றும் சந்தர்ப்பங்களின் போதெல்லாம் கைகளைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

**பயனாளர் / வாடிக்கையாளருக்கு**

- முன்னரே தயாரித்து விற்கப்படும் உணவுகளை உண்பதை மட்டுப்படுத்துங்கள்.
- பழங்கள், கடலைகள் மற்றும் ஏனைய ஆரோக்கியமான உணவு வகைகளைச் சிற்றுண்டிகளாக அருந்துங்கள்.
- சமைத்த உணவுகளை நம்பிக்கைக்குரியவரும் எப்போதும் குறித்த பிரதேசத்தில் மட்டும் தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவருமாக உள்ள விற்பனையாளரிடம் இருந்து மட்டும் கொள்வனவு செய்யுங்கள்.
- உடல் நலம் குன்றியவர் போலத் தென்படும் அல்லது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத விற்பனையாளர்களிடம் இருந்து உணவுகளை கொள்வனவு செய்ய வேண்டாம்.
- கொள்வனவு நடவடிக்கையின் போதும் அதன் பின்னரும் தனிநபர் இடைவெளியினைப் பேணுவதுடன் கைச் சுகாதாரத்தினையும் கடைப்பிடிக்கவும்.
- உணவுப் பொருட்களை, இயலுமான சந்தர்ப்பங்களில் 65 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் நான்கு நிமிடங்களுக்குச் சூடாக்கவும்.
- உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தபின்னர் அவற்றைத் திறந்த நிலையில் வைக்க வேண்டாம். அவற்றினைச் சூடாக்கியதும் இயலுமான விரைவில் உட்கொள்ளுங்கள்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- அறிவிப்புப் பலகைகள்.
- ஒவ்வொரு நடமாடும் வாகனத்திலும் / விற்பனைக் கூடத்திலும் அறிவித்தல்கள்/ சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துதல்.
- சமூக ஊடகங்கள்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020